நமது தினகனி
செய்திகள் மற்றும் விளம்பரங்கள்
தொடர்புக்கு:
94436 99066
namadhudhinakani@gmail.com
www.dhinakani.com

RNI-TNTAM/2023/88253

# நமது தினகனி
NAMADHU DHINA KANI
காலை நாளிதழ்








| Vol: 02 | Issue: 162 | 4 Pages | 10.1.2025 | Thursday | Price Rs. 6 | Annual Subscription Rs: 1825 |
|---|---|---|---|---|---|---|
| மலர்: 02 | இதழ்: 162 | 4 பக்கங்கள் | 10.1.2025 | வெள்ளிக்கிழமை | விலை ரூ.6 | வருட சந்தா ரூ.1825 |




**நகையும் உவகையுங் கொல்லுஞ் சினத்தின்**
**பகையும் உளவோ பிற**

**விளக்கம்:**
முகமலர்ச்சியும் அகமலர்ச்சியும் கொல்லுகின்ற சினத்தை விட ஒருவனுக்கு பகையானவை வேறு உள்ளனவோ?


## திபெத்தில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: மொத்தம் 515 அதிர்வுகள் பதிவானது சீனா

பீஜிங், ஜன.10

சீனாவின் ஒரு பகுதியாக உள்ள திபெத்தில் நேற்று சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து அடுத்தடுத்து நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. இதனால் பல பகுதிகளில் கட்டிடங்கள் குலுங்கியதால் வீடுகளை விட்டு வெளியேறி மக்கள் தெருக்களில் தஞ்சம் புகுந்தனர். இந்த நிலநடுக்கத்தில் சிக்கி இதுவரை 126 பேர் உயிரிழந்துள்ளனர். 188 பேர் காயமடைந்துள்ளனர் என சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கிடையே, திபெத்தில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தை தொடர்ந்து 515 அதிர்வுகள் பதிவானதாக சீன நிலநடுக்க வலையமைப்பு மையம் இன்று தெரிவித்துள்ளது. சீன மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், இன்று காலை 8 மணி நிலவரப்படி, மொத்தம் 515 அதிர்வுகள் பதிவாகியுள்ளன. இதில் 488 அதிர்வுகள் 3.0 ரிக்டர் அளவுக்கு கீழும், 27 அதிர்வுகள் 3.0 ரிக்டர் அளவிலும், 24 அதிர்வுகள் 3.0 முதல் 3.9 வரையிலான ரிக்டர் அளவிலும், 3 அதிர்வுகள் 4.0 முதல் 4.9 வரையிலான ரிக்டர் அளவிலும் பதிவானதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லாஸ் ஏஞ்சல்ஸ் அருகே கட்டுக்கடங்காமல் பற்றி எரியும் காட்டுத் தீ



லாஸ் ஏஞ்சல்ஸ், ஜன.10

அமெரிக்காவின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரின் அருகில் உள்ள பசிபிக் பாலிசேட்ஸ் பகுதியில் திடீரென காட்டுத் தீ ஏற்பட்டது. மேற்குப் பகுதியில், நேற்று காலை பரவத் தொடங்கிய தீ இரவு வரை கட்டுக்கடங்காமல் பற்றி எரிந்தது. மலையை ஒட்டியுள்ள குடியிருப்பு பகுதிகளிலும் காட்டுத் தீ சூழ்ந்ததால் பல வீடுகள் கருகின. ஆயிரக்கணக்கான மக்கள் வெளியேற்றப்பட்டனர்.

இதேபோல் லாஸ் ஏஞ்சல்ஸின் வடகிழக்கில் அல்டடேனா மலையடிவாரத்திலும் காட்டுத்தீ பரவியது. கடுமையான காற்று வீசுவதால் தீ வேகமாக பரவி வருகிறது. மலையடிவார குடியிருப்புகளையும் தீ சூழ்ந்ததால் மக்கள் வெளியேற்றப்படுகின்றனர்.

ஒரு முதியோர் பராமரிப்பு மையத்தையும் தீ சூழ்ந்தது. அங்கு தங்கியிருந்த முதியோர்களை ஊழியர்கள் பாதுகாப்பாக வெளியேற்றி, சக்கர நாற்காலிகள் மற்றும் மருத்துவமனை படுக்கைகளுடன் பார்க்கிங் பகுதிக்கு கொண்டு வந்தனர். பின்னர் ஆம்புலன்ஸ்கள் மற்றும் பிற வாகனங்கள் மூலம் வேறு இடத்திற்கு பாதுகாப்பாக அழைத்துச் செல்லப்பட்டனர்.

சில இடங்களில் 60 மைல் வேகத்தில் காற்று வீசுவதால் தீப்பிழம்புகள் வேகமாக பரவுகின்றன. தீயணைக்கும் விமானங்கள் கூட பறக்க முடியாத அளவுக்கு காற்று வீசியதால் தீயணைப்பு பணியில் தொய்வு ஏற்பட்டது.

## ஆபாச பட நடிகை வழக்கு; டிரம்ப்பின் மேல்முறையீட்டு மனு தள்ளுபடி



நியூயார்க், ஜன.10

அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்டு டிரம்ப். இந்நிலையில், கடந்த நவம்பர் 5ந்தேதி அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடந்து முடிந்தது. இதில், பெரும்பான்மையான இடங்களை முன்னாள் ஜனாதிபதி டிரம்ப் சார்ந்த குடியரசு கட்சி கைப்பற்றியது. டிரம்ப் வெற்றி பெற்று, வருகிற 20 ந்தேதி அடுத்த ஜனாதிபதியாக பதவியேற்க இருக்கிறார். டிரம்ப், 2017ம் ஆண்டு முதல் 2021ம் ஆண்டு வரை அமெரிக்க ஜனாதிபதியாக பணியாற்றினார்.

இதனிடையே, டிரம்ப் தன்னுடன் பாலியல் உறவு கொண்டதாக அமெரிக்காவை சேர்ந்த ஆபாச பட நடிகையான ஸ்டோமி டேனியல்ஸ் பரபரப்பு குற்றச்சாட்டை கூறினார். 2006ம் ஆண்டு ஜூலை மாதம் டொனால்டு டிரம்ப் ஓட்டலில் வைத்து தன்னுடன் பாலியல் உறவு கொண்டதாக ஸ்டோமி டேனியல்ஸ் தெரிவித்தார். ஆனால், இந்த குற்றச்சாட்டை டிரம்ப் மறுத்துள்ளார்.

அதேவேளை, 2016ம் ஆண்டில் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவதற்கு முன்பு, தன்னுடனான பாலியல் உறவு விவகாரம் பற்றி வெளியே கூறிவிடக்கூடாது என்பதற்காக டிரம்ப் தனக்கு பணம் கொடுத்ததாகவும் ஸ்டோமி டேனியல்ஸ் தெரிவித்தார்.

தேர்தல் பிரசார நிதியாக ஒதுக்கப்பட்ட பணத்தில் இருந்து டொனால்டு டிரம்ப் போலியான வணிக பதிவுகளை உருவாக்கி, பின்னர் தனது முன்னாள் வழக்கறிஞரான மைக்கேல் கோஹன் மூலம் ஸ்டோமி டேனியல்சுக்கு அந்த பணத்தில் இருந்து 1 லட்சத்து 30 ஆயிரம் அமெரிக்க டாலர்களை டிரம்ப் கொடுத்துள்ளார். இந்த விவகாரம் ஊடகங்களில் வெளிவந்து பரபரப்பை ஏற்படுத்தியது. டொனால்டு டிரம்பிற்கு எதிராக பணமோசடி உள்பட பல்வேறு பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்யப்பட்டு விசாரணை நடைபெற்றது. இதில், பணமோசடி உள்பட 34 பிரிவுகளில் டொனால்டு டிரம்ப் குற்றவாளி என மேன்ஹாட்டன் கோர்ட்டு தீர்ப்பளித்தது. இந்த வழக்கில் இந்த வாரம் தண்டனை அறிவிப்பு வெளியாகும் என தெரிவிக்கப்பட்டது. இந்த தீர்ப்பு அறிவிப்பை தள்ளி வைக்கும்படி கோரி, டிரம்ப் சார்பில் நியூயார்க் கோர்ட்டு ஒன்றில் மனு தாக்கல் செய்யப்பட்டது.

எனினும், டிரம்ப்பின் இந்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது. வருகிற வெள்ளி கிழமை தண்டனை விவரம் வெளியிடப்படும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. டிரம்ப்பின் வழக்கறிஞர்களின் வாதங்களை இணை நீதிபதி எல்லன் கெஸ்மர் நிராகரித்து உள்ளார். ஜனவரி 20ந்தேதி அமெரிக்க ஜனாதிபதியாக டிரம்ப் பதவியேற்க உள்ள நிலையில், இந்த தீர்ப்பு பரபரப்பாக பார்க்கப்படுகிறது. எனினும், கெஸ்மரின் இந்த தீர்ப்புக்கு எதிராக நீதிமன்ற அமர்வு மற்றும் சுப்ரீம் கோர்ட்டில் டிரம்ப் மேல்முறையீடு செய்ய முடியும். இந்த சூழலில், வெள்ளி கிழமை தண்டனை விவரம் தீர்ப்புக்காக நேரிலோ அல்லது காணொலி காட்சி வழியாகவோ, இவற்றில் ஏதேனும் ஒன்றை தேர்ந்தெடுத்து வழக்கில் டிரம்ப் ஆஜராகலாம் என நீதிபதி ஜுவான் மெர்சன் கூறியுள்ளார். ஆனால், நீதிபதி மெர்சனை டிரம்ப் நேற்று கடுமையாக சாடினார். மெர்சன் ஒரு நேர்மையற்ற நீதிபதி என பத்திரிகையாளர் சந்திப்பின்போது, டிரம்ப் கூறினார்.

# பொள்ளாச்சி விவகாரத்தில் அதிமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை முதலமைச்சர்



சென்னை, ஜன.10

தமிழக சட்டசபையின் 3ம் நாள் நிகழ்வில் அண்ணா பல்கலைக்கழக மாணவிக்கு நேர்ந்த பாலியல் வன்கொடுமை சம்பவம் தொடர்பாக அரசியல் கட்சியினர் இடையே விவாதம் நடைபெற்றது. இதையடுத்து இச்சம்பவம் தொடர்பாக சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானத்தின் மீது முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:

உண்மையான அக்கரையோடு சில உறுப்பினர்கள் பேசியுள்ளார்கள். அவையில் ஒருவர் மட்டும் அரசியல் ஆதாயத்திற்காக பேசினார். சென்னையில் மாணவிக்கு நடந்த பாலியல் வன்கொடுமை மாபெரும் கொடூரம். பாதிக்கப்பட்ட பெண் பக்கம் நின்று நியாயம் பெற்று தருவதே அரசின் நோக்கம்.

குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தயவு தாட்சண்யமின்றி நடவடிக்கை எடுக்கப்படும். குற்றவாளிக்கு உச்சபச்ச தண்டனை கிடைப்பதை அரசு உறுதி செய்யும்.

பெண்களுக்கு எதிரான குற்றங்களில் 80 சதவீதத்திற்கு மேல் தண்டனை பெற்று தந்துள்ளோம். பெண்களுக்கு பாதுகாப்பான நகரங்களில் சென்னையும், கோவையும் உள்ளது.

மனசாட்சி இல்லாமல் பேசுபவர்கள் பொள்ளாச்சி சம்பவம் பற்றி எண்ணி பாருங்கள். பொள்ளாச்சி விவகாரத்தில் அதிமுக அரசு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

பொள்ளாச்சி சம்பவம் அதிமுக பிரமுகர்களால் நடந்தது என்பது சிபிஐயால் தெரியவந்தது. சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் அதிமுக நிர்வாகி கைது செய்யப்பட்டுள்ளார்.

ஞானசேகரன் திமுக உறுப்பினர் இல்லை என்பதை திட்டவட்டமாக தெரிவிக்கிறேன் என்றார்.

பொள்ளாச்சி சம்பவம் குறித்து பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு எதிர்ப்பு தெரிவித்து கோஷம் எழுப்பிய அ.தி.மு.க.வினர் சட்டசபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர்.

# அதிமுக மாணவர் அணி ஆலோசனை கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் என்னென்ன?



சென்னை, ஜன.10

புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆரின் 108வது பிறந்தநாளை சிறப்பாகக் கொண்டாடுவது தொடர்பாகவும்; வீரவணக்க நாள் பொதுக் கூட்டங்களை சிறப்பாக நடத்துவது தொடர்பாகவும் சென்னை ராயப்பேட்டையில் உள்ள தலைமை அலுவலகத்தில், அதிமுக மாணவர் அணி மாநில நிர்வாகிகள்; மாவட்டச் செயலாளர்கள் ஆலோசனை கூட்டம் இன்று நடைபெற்றது. இந்த கூட்டத்தில் 11 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

அதன்விவரம் பின்வருமாறு:

தமிழ் நாட்டில் இந்தி திணிப்பை அடியோடு அழித்து, தாய் மொழியாம் தமிழ் மொழியை காத்திடும் நோக்கில், 1965ம் ஆண்டு நடைபெற்ற மாபெரும் இந்தி எதிர்ப்பு போராட்டத்தில் கலந்து கொண்டு, வீரமரணம் அடைந்த மொழிப்போர் தியாகிகளுக்கு ஆண்டுதோறும் ஜனவரி மாதம் 25ம் தேதி அதிமுக சார்பில் வீர வணக்க நாள் அனுசரிக்கப்படும். "இந்தி திணிப்பை ஒருபோதும் அனுமதிக்க மாட்டோம்" என்று வீர முழக்கமிட்டு, விஷம் அருந்தியும், தூக்கிட்டும், துப்பாக்கிச் சூட்டுக்கு ஆளாகியும் உயிர்நீத்த தியாகிகளுக்கு வீர வணக்கம் செலுத்தும் விதமாக, ஜனவரி, 25ம் தேதி அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி ஆணைக்கிணங்க மாநிலம் முழுவதும் மாணவர் அணி சார்பாக வீர வணக்க நாள் கூட்டங்களை சிறப்பாக நடத்துவது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

2) புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., புரட்சித் தலைவி ஜெயலலிதா ஆகியோரது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கழக மாணவர் அணி சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்குதல் மற்றும் விளையாட்டுப் போட்டிகள் நடத்துதல்.

3) மக்களை மீளாத் துயரத்தில் ஆழ்த்தி வரும், ஸ்டாலின் தலைமையிலான விடியா திமுக அரசை வீழ்த்தி, 2026ம் ஆண்டு நடைபெற உள்ள சட்டமன்றப் பொதுத்தேர்தலில், கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர், தமிழ் நாடு முன்னாள் முதலமைச்சர் 'புரட்சித் தமிழர்' திரு. எடப்பாடி K. பழனிசாமி அவர்கள் தலைமையில், தமிழகத்தில் மீண்டும் அம்மாவின் ஆட்சியை அமைப்பதற்கு அயராது உழைத்திட சபதமேற்போம்!

4) புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆரின் துணைவியாரும், தமிழ் நாடு முன்னாள் முதல்அமைச்சருமான, வி.என். ஜானகி அம்மையாருடைய நூற்றாண்டு விழாவை சீரும் சிறப்புமாக நடத்திக் காட்டிய கழக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமிக்கு நன்றியும், பாராட்டும்!.

5) அதிமுக மாணவர் அணியில் இளம் தலைமுறையினரை அதிக அளவில் சேர்த்து சாதனை படைத்திட சூளுரை.

6) தமிழக பள்ளிக் கல்லூரி மாணவ, மாணவியர்களின் அன்றாடப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு அதிமுக மாணவர் அணி பாதுகாப்பு அரணாக துணை நிற்றல்.

7) சமூக வலைதளங்கள் மூலமாக அதிக அளவில் மாணவ, மாணவியர்களையும், இளைஞர்களையும் கழகத்தில் உறுப்பினர்களாகச் சேர்த்திட சூளுரை.

8) சென்னை அண்ணா பல்கலைக் கழகத்தில் பயிலும் மாணவி ஒருவர் பல்கலைக் கழக வளாகத்திலேயே பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட நிகழ்வு தமிழ் நாடு மட்டுமல்லாமல், இந்தியா முழுவதையும் உலுக்கி தலைக் குனிவு ஏற்படுத்தி இருக்கிறது.

9) யார் அந்த சார்' முழக்கம் மூலம் அதிமுக மாணவர் அணி போராட்டம் களம் காணுதல்.

10) ஜனநாயகப் போராட்டத்திற்கு அனுமதி அளிக்காத முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசை கண்டிக்கின்றோம்.

11) பள்ளி, கல்லூரி வளாகத்தில் போதைப்பொருட்கள் புழக்கத்தைக் கட்டுப்படுத்தாத முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக அரசை கண்டிக்கின்றோம். இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுள்ளன.

# பாலாற்றின் குறுக்கே அணை கட்டும் முடிவை ஆந்திர அரசு கைவிட வேண்டும் டி.டி.வி. தினகரன்

சென்னை, ஜன.10

அமமுக பொதுச்செயலாளர் டி.டி.வி. தினகரன் வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

பாலாற்றின் குறுக்கே தடுப்பணைகள் கட்ட முயற்சிப்பது சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புக்கு முரணானது. தமிழகத்தின் வட மாவட்டங்களை பாலைவனமாக்கும் முடிவை ஆந்திர அரசு கைவிட வேண்டும் .

பாலாற்றின் குறுக்கே மீண்டும் தடுப்பணைகள் கட்டப்படும் என ஆந்திர மாநில முதல்மந்திரி சந்திரபாபு நாயுடு திட்டவட்டமாக தெரிவித்திருப்பதாக நாளிதழ்களில் செய்திகள் வெளியாகியுள்ளன.

சந்திரபாபு நாயுடுவின் இந்த அறிவிப்பு வேலூர், திருவண்ணாமலை, காஞ்சிபுரம், திருவள்ளூர் உள்ளிட்ட பல்வேறு வடமாவட்டங்களில் விவசாயத்தை மட்டுமே நம்பியிருக்கும் பல்லாயிரக்கணக்கான விவசாயிகள் மத்தியில் கடும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பாலாற்றின் குறுக்கே அணை கட்டியேத் தீருவோம் என்ற பிடிவாதப்போக்குடன் செயல்பட்ட முந்தைய அரசின் பிடிவாதப் போக்கையே சந்திரபாபு நாயுடுவும் தொடர்வது, 1892 ஆம் ஆண்டு போடப்பட்ட மைசூருக்கும் சென்னைக்கும் இடையிலான நதிநீர் பங்கீடு ஒப்பந்தத்தை மீறுவதோடு, சுப்ரீம் கோர்ட்டு தீர்ப்புக்கும் முரணாக அமைந்திருக்கிறது.

எனவே, தமிழ்நாட்டின் வட மாவட்டங்களின் நீர் ஆதாரத்தை கடுமையாக பாதிக்கும் பாலாற்றின் குறுக்கே அணை கட்டும் முடிவை கைவிட வேண்டும் என சந்திரபாபு நாயுடுவை வலியுறுத்துகிறேன். என தெரிவித்துள்ளார் .

# கலைஞர் மகளிர் உரிமைத்தொகை: 3 மாதங்களுக்குள் நடவடிக்கை உதயநிதி ஸ்டாலின்

சென்னை, ஜன.10

பெண்களின் வாழ்க்கை தரம் மேம்படவும், சமூகத்தில் சுயமரியாதையோடு வாழ்வதற்கு வழிவகுக்கும் வகையிலும் தமிழக அரசு சார்பில் 'கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம்' தொடங்கப்பட்டது. இந்த திட்டத்திற்கு ஆண்டுதோறும் நிதி ஒதுக்கப்படுகிறது. இந்த திட்டத்தின் மூலமாக, மாநிலம் முழுவதும் 1 கோடி பேருக்கும் கூடுதலான பயனாளிகளுக்கு ஒவ்வொரு மாதமும் அவர்களது வங்கிக் கணக்கில் ரூ.1,000 செலுத்தப்பட்டு வருகிறது. தகுதியான அனைவருக்கும் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் பயனடையும் வகையில், நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாக தமிழக அரசு சார்பில் தெரிவிக்கப்பட்டு இருந்தது. இந்நிலையில், தமிழக சட்டசபை கூட்டம் இன்று காலை தொடங்கியது. இதில் பேசிய துணை முதல்அமைச்சர் உதயநிதி ஸ்டாலின், தமிழகத்தில் மகளிர் உரிமைத்தொகைக்கு புதிதாக விண்ணப்பித்தவர்களுக்கு 3 மாதங்களுக்குள் நடவடிக்கை எடுக்கப்படும். இதுவரை பயன்பெறாதவர்கள் மகளிர் உரிமைத்தொகை திட்டத்தில் பயன்பெற நடவடிக்கை எடுப்போம். திட்ட விதிக்கு உட்பட்டு கூடுதலாக மகளிர் உரிமைத்தொகை வழங்கப்படும். மகளிரின் உழைப்பை அங்கீகரிக்கும் வகையில் திட்டம் செயல்படுத்தப்படுகிறது என துணை முதல்வர் கூறியுள்ளார்.

# கேரளாவில் இருந்து காய்கறிக் கழிவுகளை ஏற்றி வந்த லாரி பறிமுதல்: ஓட்டுநர், கிளீனர் கைது

சென்னை, ஜன.10

கேரளாவில் இருந்து கொண்டு வரப்பட்ட மருத்துவக் கழிவுகள் நெல்லை மாவட்டத்தில் உள்ள கிராமங்களில் கொட்டப்பட்ட சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. தேசிய பசுமை தீர்ப்பாயம் இதற்கு கடுமையான கண்டனம் தெரிவித்தது.

கேரளாவில் இருந்து தமிழக எல்லையில் கொட்டப்படும் கழிவுகள் தொடர்பாக தமிழக அரசு கண்காணிக்க வேண்டும் எனவும் அறிவுறுத்தியிருந்தது.



இந்த நிலையில் கேரளாவில் இருந்து காய்கறிக் கழிவுகளை ஏற்றி வந்த லாரி பறிமுதல் செய்யப்பட்டது. கன்னியாகுமரி மாவட்டம் நித்திரவிளை பகுதியில் கேரளாவில் இருந்து காய்கறிக் கழிவுகளை ஏற்றி வந்த லாரி பறிமுதல் செய்யப்பட்டுள்ளது.

ஓட்டுநர், கிளீனர் இருவரும் கைதான நிலையில் லாரி உரிமையாளர் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

# தி.மு.க.அ.தி.மு.க. பிரச்சனை தெரு சண்டை சீமான்

வடலூர், ஜன.10

நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் வடலூர் வந்தார். அங்குள்ள வள்ளலார் சத்ய ஞானசபையில் அவர் வழிபட்டார். இதன்பின் செய்தியாளர்களிடம் சீமான் கூறியதாவது:

தி.மு.க. அ.தி.மு.க. பிரச்சனை தெரு சண்டை. 60 ஆண்டுகளாக இதை தான் செய்து வருகிறார்கள். தி.மு.க.வினர் பொள்ளாச்சி விவகாரம், கொடநாடு விவகாரம் என்கிறார்கள். அ.தி.மு.க.வினர் அண்ணா பல்கலைக்கழக மாணவி விவகாரம் என்று மாறி, மாறி கூறி வருகிறார்கள்.

நாம் தமிழர் கட்சியில் இருந்து விலகியவர்கள் முக்கிய நிர்வாகிகளாக இருக்க மாட்டார்கள். முட்டுக்கட்டை நிர்வாகிகளாக இருப்பார்கள்.

வெள்ளம் சீறிப்பாய்ந்து வரும் போது பாறையாக இருந்தாலும் உருட்டிக் கொண்டு தான் செல்லும். நிர்வாகிகள் விலகியதால் நாட்டு மக்களுக்கு என்ன பிரச்சனை. நிர்வாகிகள் விலகல் குறித்து நீங்கள் கவலைப்பட வேண்டாம்.



சிற்றூர்களையெல்லாம் நகராட்சியுடன் இணைத்தால் மக்களுக்கு என்ன பிரயோஜனம்.

கிராமங்களில் இருந்து தான் அரிசி, பருப்பு, காய்கறிகள் உள்ளிட்ட பொருட்கள் வருகிறது. அதனால்தான் எங்களை அப்படியே வாழ விடுங்கள் என்கிறார்கள், இதில் என்ன பிரச்சனை. தமிழகத்தில் ஸ்மார்ட் சிட்டி உள்ளது. வில்லேஜ் சிட்டி உள்ளதா? இவ்வாறு அவர் கூறினார்.

# முதலமைச்சர் மகள் குறித்து முகநூலில் விமர்சனம்: நாம் தமிழர் கட்சி பிரமுகர் கைது

குத்தாலம், ஜன.10

சென்னை சோழிங்கநல்லூர், பாலவாக்கம் பகுதியை சேர்ந்தவர் அருள் தாஸ். இவரது மகன் தமிழரசன் (வயது 35). இவர் நாம் தமிழர் கட்சியில் தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளராக உள்ளார்.

என்ஜினீயரிங் பட்டதாரியான இவர் கடந்த 2020ம் ஆண்டு பஹ்ரைன் நாட்டுக்கு வேலைக்கு சென்றுள்ளார். அங்கிருந்து, தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் மகள் செந்தாமரை குறித்து முகநூலில் தரக்குறைவாக விமர்சனம் செய்து பதிவிட்டதாககூறப்படுகிறது.

இதுகுறித்து, மயிலாடுதுறை மாவட்டம், செம்பனார்கோவிலை சேர்ந்த தி.மு.க. தஞ்சை மண்டல தகவல் தொழில்நுட்ப அணி பொறுப்பாளர் பி.எம்.ஸ்ரீதர் மயிலாடுதுறை மாவட்ட சைபர் கிரைம் போலீசில் புகார் அளித்திருந்தார். இதுகுறித்து சைபர்கிரைம் போலீசார் வழக்குபதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வந்தனர்.



இந்நிலையில் பஹ்ரைன் நாட்டில் இருந்து சென்னையில் உள்ள தனது வீட்டுக்கு வருவதற்காக தமிழரசன் கடந்த வெள்ளிக்கிழமை விமானம் மூலம் மும்பை வந்துள்ளார். தமிழரசன் குறித்து ஏற்கெனவே தகவல் தெரிவிக்கப்பட்டு இருந்ததால், மும்பை விமான நிலையத்தில் வந்து இறங்கிய தமிழரசனை மும்பை போலீசார் கைது செய்து, மயிலாடுதுறை சைபர் கிரைம் போலீசாருக்கு தகவல் தெரிவித்தனர்.

இதையடுத்து, சைபர் கிரைம் போலீசார் மும்பை விரைந்து சென்று, தமிழரசனை கைது செய்து மயிலாடுதுறை கோர்ட்டுக்கு அழைத்து வந்து நீதிபதி கலைவாணியிடம் ஆஜர்படுத்தினர். இதையடுத்து தமிழரசனை 15 நாள் சிறையில் அடைக்க நீதிபதி கலைவாணி உத்தரவிட்டார். இதையடுத்து போலீசார் தமிழரசனை மயிலாடுதுறை கிளை சிறையில் அடைத்தனர்.

முன்னதாக தமிழரசன் கைது செய்யப்பட்ட சம்பவத்துக்கு எதிர்ப்பு தெரிவித்து அக்கட்சியின் மாவட்ட செயலாளர் தமிழன்காளிதாசன் உள்ளிட்ட நிர்வாகிகள் கோர்ட்டின் முன்பு கண்டன முழக்கங்களை எழுப்பினர்.

# அண்ணா பல்கலை. விவகாரம்: ஆளுநர் பொறுப்பேற்க வேண்டும் வேல்முருகன்

சென்னை, ஜன.10

தமிழக சட்டசபையில் அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் விவகாரம் தொடர்பாக சிறப்பு கவன ஈர்ப்பு தீர்மானம் கொண்டு வந்து விவாதிக்கப்பட்டது.

எம்.எல்.ஏ. பூவை ஜெகன்மூர்த்தி பேசுகையில்,

அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் பதிவாளர் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? சம்பந்தப்பட்ட நபர் பாதுகாவலர்களை மீறி பல்கலைக்கழகத்திற்குள் எப்படி சென்றார். சிசிடிவி நிலை என்ன? மாணவி கல்வி, பாதுகாப்புக்கு அரசு உறுதி அளிக்க வேண்டும். யார் அந்த சார் என்பதை தெரியப்படுத்த வேண்டும் என்று பேசினார்.

இதுதொடர்பாக சபாநாயகர் அப்பாவு,

அண்ணா பல்கலைக்கழக மாணவி வன்கொடுமை வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளது. வழக்கு நீதிமன்றத்தில் விசாரணையில் உள்ளதால் ஓரிரு வரிகளில் பேசவும் என்று பேசினார்.

எம்.எல்.ஏ. வேல்முருகன் பேசுகையில்,



அண்ணா பல்கலை. மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்திற்கு ஆளுநர் தான் பொறுப்பேற்க வேண்டும். ஆளுநரின் ஆளுகைக்கு கீழ் உள்ள பல்கலைக்கழகத்திற்கு நடந்த வன்கொடுமைக்கு அவரே பொறுப்பு.

ஆளுநர் மாளிகை முன்பு ஆர்ப்பாட்டம் செய்யக் கூட அனுமதியில்லை. அண்ணா பல்கலைக்கழக மாணவி வன்கொடுமை குறித்து ஆளுநர் ஆர்.என். ரவி ஏன் வாய் திறக்கவில்லை? மாணவி பாலியல் வன்கொடுமையால் பாதிக்கப்பட்டது குறித்து ஆளுநரின் செயலில் சந்தேகம் உள்ளது. யார் அந்த சார்? என்பது தெரிய வேண்டும் என்று பேசினார்.

எம்.எல்.ஏ. கொங்கு ஈஸ்வரன் பேசுகையில்,

மாணவி பாலியல் வன்கொடுமை விவகாரத்தில் அந்த சார் ஆளுநராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அண்ணா பல்கலை. உள்பட பல கல்லூரிகளில் துணைவேந்தர்கள் இல்லை என்று பேசினார்.

மதிமுக எம்.எல்.ஏ. சதன் திருமலை பேசுகையில்,

பல்கலைக்கழகத்தில் நடைபெற்ற சம்பவத்திற்கு ஆளுநர் தான் பொறுப்பேற்க வேண்டும். பாலியல் வன்கொடுமை குற்றவாளிக்கு தண்டனை பெற்றுத்தரும் பணியை மாநில அரசு செய்து கொண்டிருக்கிறது. அண்ணா பல்கலைக்கழத்தில் நிறைய கட்டுப்பாடுகள் விதித்து தொடர்ந்து கவனிக்கப்படுகிறது என்று பேசினார்.

இந்திய கம்யூனிஸ்ட் எம்.எல்.ஏ. மாரிமுத்து பேசுகையில், யாராக இருந்தாலும் சட்டத்தின்படியில் இருந்து தண்டிக்க வேண்டும் என்று பேசினார்.

மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் நாகை மாலி எம்.எல்.ஏ. பேசுகையில்,

தொழில்நுட்ப கோளாறால் எஃப்.ஐ.ஆர். வெளியானது என்பதை ஏற்க முடியாது. குற்றவாளி செல்போனில் உரையாடிய நபரை தொடர்ந்து கண்காணிக்க வேண்டும். பாதிக்கப்பட்ட மாணவிக்கு உயர்நீதிமன்ற உத்தரவுப்படி நிவாரணத்தை தாமதமின்றி வழங்க வேண்டும் என்று பேசினார். வி.சி.க. எம்.எல்.ஏ. சிந்தனைச்செல்வன் பேசுகையில்,

சிசிடிவி விவகாரத்தை தாண்டி குற்றவாளி 24 மணி நேரத்தில் கைது செய்யப்பட்டிருக்கிறார். ஆளுநர் என்ற அடையாளத்தின் மூலம் தமிழகத்தில் கல்வி கட்டமைப்பின் மீது மோசமான தாக்குதல் நடக்கிறது என்று பேசினார்.

# மடைமாற்றாமல் பதில் சொல்லுங்கள் ஸ்டாலின் SIR யார் அந்த SIR? : ஜெயக்குமார்

சென்னை, ஜன.10

அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர் ஜெயக்குமார் எக்ஸ்தளபக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

ஸ்டாலின் "SIR"ன் ஆட்சியைப் பார்த்து எடப்பாடி பழனிசாமி கேட்ட "யார்_அந்த_SIR" என்ற ஒற்றைக் கேள்வி. அதற்கு பதில் சொல்லத் திராணி இல்லாமல், சட்டமன்றத்தில் தன் வாய்க்கு வந்ததையெல்லாம் உளறிக் கொட்டியுள்ளார்.

பல்கலைக்கழகத்தின் பெயரைச் சொன்னால் களங்கம் ஏற்படும் என்று சொல்லும் ஸ்டாலின் SIR, தான் நடத்தும் விடியா ஆட்சியே பேரறிஞர் அண்ணா அவர்களுக்கு ஏற்பட்ட பெரும் களங்கம் தான் என்பதை முதலில் உணர வேண்டும்.

"ஞானசேகரனுக்கும் திமுகவுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை" என்று இத்தனை நாட்கள் திமுக அமைச்சர்கள் சொன்னதற்கும், "ஞானசேகரன் திமுக அனுதாபி தான்" என்று இன்று ஸ்டாலின் சார் சட்டமன்றத்தில் அளித்துள்ள ஒப்புதல் வாக்குமூலத்திற்கும் உள்ள வேறுபாடும்,

"ஞானசேகரன் மீது திமுக ஆட்சியில் எந்த வழக்கும் இல்லை; அதிமுக ஆட்சியில் தான் வழக்கு பதியபட்டது" என்று திமுக அனுதாபி ஞானசேகரன் பற்றி அமைச்சர் ரகுபதி சார் அளித்த வாக்குமூலமுமே, இந்த வழக்கில் அதிமுக மீண்டும் மீண்டும் எழுப்பும் கேள்வியை நிரூபிக்கும் வண்ணம் உள்ளது.

"இந்த வழக்கில் ஒரே ஒரு குற்றவாளி தான்" என்று ஸ்டாலின் சாரின் அரசு இந்த வழக்கை மூட முயற்சித்ததால் தான் #யார்_அந்த_SIR என்ற கேள்வியே மக்களிடையில் எழுந்தது.

அதைப் பற்றி ஒரு வார்த்தை கூட இவ்வளவு நாள் பேசாமல், சட்டமன்றத்தின் மாண்பு மீதும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் மீதும் துளியும் மரியாதை இல்லாமல் இன்றைக்கு ஸ்டாலின் SIR பேசியிருக்கும் பேச்சு வெட்கக்கேடானது.

பொள்ளாச்சி வழக்கை CBI விசாரணைக்கு நேர்மையுடன் மாற்றி உத்தரவிட்டது அதிமுக அரசு. ஆனால், அண்ணா நகர் சிறுமி பாலியல் வழக்கில் உயர்நீதிமன்ற உத்தரவை எதிர்த்து உச்சநீதிமன்றம் சென்றது ஸ்டாலின் சாரின் அரசு.

அதிமுகவிற்கு ஒருபோதும் மடியில் கனமில்லை; வழியில் பயமில்லை!

"போராட்டங்களையெல்லாம் கண்டு அஞ்சி நடுங்கி, அடக்குமுறையை கட்டவிழ்த்துவிடும் ஆட்சிதான் ஸ்டாலின் சாரின் ஆட்சி."

"ஸ்டாலின் சாரின் வெட்கங்கெட்ட ஆட்சிக்கு வேங்கைவயலே சாட்சி"

"திமுக அலங்கோல ஆட்சிக்கு அண்ணா பல்கலை. பாலியல் வழக்கே சாட்சி"

என்று ஸ்டாலின் SIR பேசிய அதே மொழியில் பதில் அளிக்கத் தெரிந்தாலும், ஸ்டாலின் SIR சொன்னது போல் இது ஒரு Sensitive வழக்கு என்பதை உணர்ந்து தான், பாதிக்கப்பட்ட மாணவிக்கு நீதி வேண்டும் குரலாகவே எடப்பாடியார் தலைமையிலான அதிமுகவினர் கேள்வியைக் கேட்டு வருகிறோம் என்பதை மக்கள் அறிவார்கள்.

மடைமாற்றாமல் பதில் சொல்லுங்கள் ஸ்டாலின் SIR #யார்_அந்த_SIR ?

இவ்வாறு அவர் பதிவிட்டுள்ளார்.

# பல்கலைக்கழக மானிய குழு விதிகளை மீறினால் பட்டம் வழங்கும் உரிமை பறிபோகுமா? ராமதாஸ் கண்டனம்

சென்னை, ஜன.10

பா.ம.க. நிறுவனர் ராமதாஸ் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

துணைவேந்தர் நியமனம் குறித்து மானியக்குழு வகுத்துள்ள வரைவு விதிகள் அனைத்தும் நியாயமற்றவை; அதுமட்டுமின்றி அவை மானியக்குழுவின் அதிகார வரம்புக்கு அப்பாற்பட்டவை ஆகும். துணைவேந்தர்கள் நியமனத்திற்கான தேர்வுக் குழுவை இனி பல்கலைக்கழக வேந்தர்களான ஆளுனர்கள் தான் நியமிப்பார்கள்; தேர்வுக் குழுவில் ஆளுனரின் பிரதிநிதி, மானியக்குழுவின் பிரதிநிதி, பல்கலைக்கழக ஆட்சிக் குழுவின் பிரதிநிதி ஆகிய மூவர் இடம்பெறுவர் என்றும் மானியக் குழு விதிகளில் கூறப்பட்டுள்ளது.

துணைவேந்தர் நியமன விதிகளை விட, பேராசிரியர்கள் மற்றும் துணைவேந்தர்கள் நியமனத்தில் மானியக் குழு வகுத்துள்ள விதிகளை பின்பற்ற மறுக்கும் கல்வி நிறுவனங்களுக்கான தண்டனைகள் தான் மிகக் கொடியவை. விதிகளை பின்பற்றாத பல்கலைக்கழகங்களின் அங்கீகாரம் ரத்து செய்யப்படும், பட்டம் வழங்கும் உரிமை பறிக்கப்படும், மானியக்குழுவின் திட்டங்களில் பங்கேற்க தடை விதிக்கப்படும், திறந்த நிலை மற்றும் தொலைத்தொடர்பு முறையிலும், ஆன்லைன் வாயிலாகவும் பட்டப்படிப்புகளை நடத்துவதற்கு தடை விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இவை அப்பட்டமான அதிகார அத்துமீறல் ஆகும். மானியக்குழு அதன் அத்துமீறலை கைவிட வேண்டும்.



இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

# திமுக எம்எல்ஏக்கள் மீது வேல்முருகன் குற்றச்சாட்டு

சென்னை, ஜன.10

தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

சட்டசபையில் தி.மு.க.வினர் அரைவேக்காட்டுதனமாக கூச்சலிடுகின்றனர்.



என்ன பேச போகிறேன் என்பதே தெரியாமல் தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் கூச்சலிடுவதாக குற்றம்சாட்டிய அவர், தி.மு.க.வினரின் செயலை சபாநாயகர் தடுத்து நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தினார்.

# 'சென்னை சங்கமம்நம்ம ஊர் திருவிழா' அனைவரும் வாரீர்! கனிமொழி

சென்னை, ஜன.10

சென்னையில் தை மாதம் தொடக்கத்தில் பொங்கல் நாட்களில் "சென்னை சங்கமம்நம்ம ஊர் திருவிழா" என்ற பிரமாண்ட கலைவிழா கடந்த 3 ஆண்டுகளாக நடத்தப்படுகிறது.

கிராமங்களில் பொங்கல் திருவிழா மிக உற்சாகமாக கொண்டாடுவது வழக்கம்.

தமிழர்களின் பண்பாடு, கலாச்சாரம், மரபுகளை பின்பற்றி கிராமப்புறங்களில் நாட்டுப்புற கலைகள் இன்றளவும் நடைபெற்று வருகின்றன. கிராமங்களில் காலங்காலமாக நடைபெற்று வரும் நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள் இன்றைய இளைஞர்களுக்கும், சிறுவர்களுக்கும் தெரியாமல் போய்விடுகின்றன.

குறிப்பாக சென்னை போன்ற நகரப் பகுதிகளில் வசிக்கும் குழந்தைகள் நாட்டுப்புற கலைகளை பார்த்திருக்க வாய்ப்பு இல்லை. இன்றைய இளைய சமுதாயத்திற்கு தமிழர்களின் பண்பாட்டை, கலாச்சாரத்தை விளக்கும் வகையில் சென்னையில் "நம்ம ஊர் திருவிழா" நடத்தப்படுகிறது.

பொங்கல் பண்டிகையை கொண்டாட உள்ள சென்னைவாசிகளை உற்சாகப்படுத்தும் வகையில் இந்த திருவிழா ஏற்பாடு செய்யப்படுகிறது.

சென்னை சங்கமம்நம்ம ஊர் திருவிழா 4 நாட்கள் நடைபெறுகிறது. 14ந்தேதி (பொங்கல்) முதல் 17ந்தேதி வரை நடத்துவதற்கு தமிழக அரசு கலை மற்றும் பண்பாட்டுத் துறை திட்டமிட்டுள்ளது.

முன்னதாக இந்த திருவிழாவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் 13ந்தேதி (திங்கட்கிழமை) மாலை 6 மணிக்கு கீழ்ப்பாக்கம் பூந்தமல்லி நெடுஞ்சாலையில் உள்ள ஏகாம்பரஸ்வரர் கோவில் திடலில் தொடங்கி வைக்கிறார்.

இதுதொடர்பாக கனிமொழி எம்.பி. வெளியிட்டுள்ள எக்ஸ் தள பதிவில்,

தமிழ் மண்ணின் கலைகளையும், கலைஞர்களையும் கொண்டாடி மகிழும் "சென்னை சங்கமம் 2025"




மாபெரும் கலைத் திருவிழாவை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். அனைவரும் வாரீர்! என்று பதிவிட்டுள்ளார்.

சென்னையில் 18 இடங்களில் கிராமிய கலை நிகழ்ச்சிகள் நடத்தப்பட உள்ளன. தமிழ்நாட்டின் முன்னணி கலைஞர்களுடன் 200 கிராமிய கலைஞர்களும் இணைந்து மாபெரும் இசை நடன நிகழ்ச்சியை நடத்துகிறார்கள்.

நம்ம ஊர் திருவிழாவில் 1500க்கும் மேற்பட்ட கலைஞர்கள் நையாண்டி மேளம், கரகாட்டம், காவடியாட்டம், புரவியாட்டம், இறை நடனம், தப்பாட்டம், துடும்பாட்டம், பம்பையாட்டம், கைசிலம்பாட்டம், ஒயிலாட்டம், தேவராட்டம், சேவையாட்டம், கோலாட்டம், ஜிக்காட்டம் ஜிம்பளா மேளம், பழங்குடியினர் நடனம்.

சிலம்பாட்டம், மல்லர் கம்பம், வில்லுப்பாட்டு, தெருக்கூத்து, கிராமிய ஆடல், பாடல் உள்ளிட்ட நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளன. சென்னையின் புகழ்பெற்ற செவ்வியல் மற்றும் மெல்லிசை கலைஞர்களின் கலைநிகழ்ச்சியும் நடக்கிறது.

இவற்றுடன் மகாராஷ்டிர மாநில லாவணி, ராஜஸ்தான் கூமர் நடனம், மேற்கு வங்காளம் துர்சி நிருத்தியா, கோவாவின் விளக்கு நடனம், மிசோரம் மூங்கில் நடனம் ஆகியவை இடம்பெறுகின்றன.

# மாநகராட்சி, நகராட்சியுடன் பஞ்சாயத்துக்களை இணைக்க ஆட்சேபனை இருந்தால் மனு அளிக்கலாம் அமைச்சர்

சென்னை, ஜன.10

சட்டசபையில் வினாக்கள்விடைகள் நேரத்தில் அமைச்சர் கே.என்.நேரு கூறியதாவது:

தமிழ்நாட்டில் 12 ஆயிரத்துக்கும் மேல் ஊராட்சிகள் உள்ள நிலையில் 371 பஞ்சாயத்துகள் மட்டும் தான் நகராட்சி மற்றும் மாநகராட்சியுடன் இணைக்கப்பட உள்ளது. அதற்கும் ஆட்சேபனை இருந்தால் 120 நாட்கள் கால அவகாசம் தரப்பட்டுள்ளது.

ஏதாவது பிரச்சினை இருந்தால் மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி கோரிக்கை வைக்கலாம். அப்போது எந்த ஊரை மாநகராட்சி, நகராட்சியுடன் சேர்க்கலாம், எந்த ஊரை சேர்க்கக்கூடாது என்ற முடிவு எடுக்கப்படும். எந்த ஊராட்சியும் நகராட்சி மற்றும் மாநகராட்சியில் சேர்க்க பிரச்சினை செய்வதில்லை,



ஊராட்சிகளை பேரூராட்சிகளாக மாற்றும் பொழுது 100 நாள் வேலை திட்டத்தில் இல்லாத நிலை ஏற்படும். பல இடங்களில் விளைநிலங்கள் இல்லாமல் கட்டிடங்கள் மட்டும் உள்ள இடங்களில் பேரூராட்சிகள் மாற்றப்படுகிறது. அதற்கும் மாவட்ட ஆட்சியர் தலைமையில் ஒரு கமிட்டி அமைக்கப்பட்டு அந்த கமிட்டி பரிசீலித்து 3 மாதங்களுக்கு பிறகு தான் மாற்றப்படுகிறது.

மாற்று கருத்து இருந்தால் அவர்கள் மாவட்ட கலெக்டரிடம் மனு அளித்தால் பரிசீலித்து முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு அவர் கூறினார்.

# சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கு கைதான இருவருக்கு ஜன.21 வரை நீதிமன்ற காவல்

சென்னை, ஜன.10

சென்னை அண்ணாநகரை சேர்ந்த 10 வயது சிறுமி கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டதாக, சதீஷ் என்ற வாலிபர் மீது புகாரளிக்கப் பாதிக்கப்பட்ட சிறுமியின் பெற்றோர் அண்ணாநகர் அனைத்து மகளிர் காவல் நிலையம் சென்றுள்ளார். அப்போது, காவல் ஆய்வாளர் தங்களை தாக்கியதாகவும், சிறுவனின் பெயரை புகாரிலிருந்து நீக்க வற்புறுத்தியதாகவும், சிறுமியின் பெற்றோர் வீடியோ வெளியிட்டிருந்தனர்.

இந்த சம்பவம் தொடர்பான போக்சோ வழக்கை தாமாக முன்வந்து விசாரித்த உயர் நீதிமன்றம், வழக்கை சிபிஐ விசாரணைக்கு மாற்றி உத்தரவிட்டிருந்தது. இதனை தொடர்ந்து சென்னை உயர்நீதிமன்றத்தின் இந்த உத்தரவை எதிர்த்து தமிழக அரசு தரப்பில் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது.

அந்த வழக்கை விசாரித்த உச்சநீதிமன்ற நீதிபதிகள், சிபிஐ விசாரணைக்கு இடைக்காலத் தடை விதித்து, தமிழகத்தில் உள்ள வெளிமாநில 7 ஐபிஎஸ் அதிகாரிகளின் பட்டியலைத் தாக்கல் செய்ய தமிழக அரசுக்கு உத்தரவிட்டனர்.

அதன்படி, தமிழகத்தைச் சேர்ந்த டிஐஜி சரோஜ் குமார் தாக்கூர் தலைமையில் ஒரு சிறப்பு புலனாய்வுக் குழு அமைக்கப்பட்டது. இந்த குழுவில் ஆவடி சட்டம் ஒழுங்கு துணை ஆணையர் ஐமன் ஜமால், சேலம் மாநகர சட்டம் ஒழுங்கு துணைஆணையர்பிருந்தா ஆகியோர் இடம்பெற்றிருந்தனர்.

இந்த வழக்கின் விசாரணையில் 16 வயது சிறுவன் மற்றும் சதீஷ் என்ற வாலிபர் ஏற்கனவே கைது செய்யப்பட்ட நிலையில், அதிரடி திருப்பமாக அதிமுக நிர்வாகி சுதாகர் என்பவரும் கைது செய்யப்பட்டுள்ளார். அதாவது, குற்றம்சாட்டப்பட்ட நபருக்கு ஆதரவாகச் செயல்பட்டு, அவரை இந்த வழக்கில் இருந்து விடுவிக்க முயற்சி செய்ததன் அடிப்படையில் அவரை கைது செய்துள்ளனர்.

மேலும், இந்த வழக்கை முதலில் விசாரித்த அண்ணாநகர் மகளிர் காவல் நிலையத்தில் பணிபுரிந்து வரும் பெண் காவல் ஆய்வாளர் ராஜி என்பவரும் சிறப்பு புலனாய்வு குழு போலீசாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் இந்த வழக்கை முறையாக விசாரிக்கவில்லை என்பதாலும், குற்றஞ்சாட்டப்பட்ட நபரை புகாரிலிருந்து விடுவிக்க முயற்சி செய்ததும் தெரிய வந்ததன் அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

அதனை தொடர்ந்து கைது செய்யப்பட்ட வட்ட செயலாளர் மற்றும் பெண் காவல் ஆய்வாளர் ஆகியோர் மருத்துவ பரிசோதனைக்காக அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ள நிலையில், விரைவில் இருவரும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்படுவார்கள் என போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், சிறுமி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைதான அதிமுக வட்டச் செயலாளர் சுதாகர் மற்றும் வழக்கை முறையாக விசாரிக்கவில்லை என்று கைதான பெண் காவல் ஆய்வாளர் ராஜி ஆகியோருக்கு வருகிற 21ந்தேதி வரை நீதிமன்ற காவல் விதித்து எழும்பூர் போக்சோ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இதனிடையே, சதீஷுக்கு சாதகமாக செயல்பட்டதாக கைது செய்யப்பட்ட காவல் ஆய்வாளர் ராஜி பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ளார்.

# பாலமேடு ஜல்லிக்கட்டு முன்னேற்பாடு பணிகள் தீவிரம்

அலங்காநல்லூர், ஜன.10

உலகப்புகழ் பெற்ற பாலமேடு ஜல்லிக்கட்டு விழா வருகின்ற 15ந் தேதி (புதன்கிழமை) அங்குள்ள மஞ்சமலை ஆற்று திடல் வாடிவாசலில் அரசு வழிகாட்டுதல்படி சீரும் சிறப்புமாக நடைபெற உள்ளது. இதற்கான முன்னேற்பாடு பணிகள் தொடங்கி, தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தற்போது வாடிவாசல் வண்ணம் பூசும் பணிகள், பார்வையாளர் அமரும் கேலரி அமைப்பது, இரண்டடுக்கு பாதுகாப்பு வேலி, உள்ளிட்ட பல்வேறு பணிகள் விறுவிறுப்பாக நடைபெற்று வருகிறது. இந்த நிலையில் பாலமேடு பேரூராட்சி சார்பில் ஜல்லிக்கட்டு விழாவிற்கான மைதான வரைபடம் தற்போது வெளியாகி உள்ளது.



அதில் பாதுகாப்பு ஏற்பாடுகளில் பல்வேறு மாற்றங்கள் செய்யப்பட்டு முக்கிய இடங்களில்கண்காணிப்பு கேமராக்கள் அதிகளவில் பொருத்தப்பட்டு பாதுகாப்பான முறையில் ஜல்லிக்கட்டு போட்டி நடத்த விழா முழுவதும் கண்காணிக்கப்பட உள்ளது.

இந்த வரைபடத்தில் 13 முக்கிய இடங்களில் கண்காணிப்பு கேமராக்கள், 6 இடங்களில் தற்காலிக கழிப்பறை வசதிகள், ஜல்லிக்கட்டு போட்டியை பார்வையாளர்கள் ஆங்காங்கே நின்று கண்டு ரசிக்க பேருந்து நிலையம், விளக்குதூண் உள்ளிட்ட 4 இடங்களில் அகன்ற திரை (எல்.இ.டி.) மூலம் நேரடி ஒளிபரப்பு வசதி, 10 இடங்களில் தற்காலிக குடிநீர் வசதிகள்,

தயார் நிலையில் ஆம்புலன்ஸ் வாகங்கள், உள்ளிட்ட பல்வேறு சிறப்பம்சங்கள் இந்த வரைபடத்தில் இடம் பெற்றுள்ளது.

மேலும் இந்த பாலமேடு ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்க ஆன்லைன் மூலம் 4 ஆயிரத்து 820 காளைகளும், ஆயிரத்து 914 மாடுபிடி வீரர்களும் பதிவு செய்துள்ளனர். இந்த போட்டியில் சுமார் 900 காளைகளுக்கு மேல் வாடிவாசலில் அவிழ்த்து விட பொது மகாலிங்க சுவாமி மடத்து கமிட்டி நிர்வாகிகள் ஏற்கனவே திட்டமிட்டுள்ளனர்.

அதன்படி தகுதி பெறும் காளைகள் அதிகளவில் இந்த ஜல்லிக்கட்டு போட்டியில் பங்கேற்க வாய்ப்பு உள்ளது. பாலமேடு பேரூராட்சி நிர்வாகமும், மகாலிங்க சுவாமி மடத்து கமிட்டி நிர்வாகிகளும் ஜல்லிக்கட்டு போட்டிக்கான ஏற்பாடுகளை தீவிரமாக செய்து வருகின்றனர்.

# நாகாலாந்து ஆளுநர் இல.கணேசனின் சகோதரர் காலமானார்

சென்னை, ஜன.10

நாகாலாந்து மாநில ஆளுநராகப் பணியாற்றி வருகிறார் இல.கணேசன்.

இதற்கு முன்பு இல. கணேசன் மணிப்பூர் மாநில ஆளுநராகவும், மேற்கு வங்க மாநில பொறுப்பு ஆளுநராகவும் பணியாற்றி உள்ளார்.



பாஜகவில் மாநில தலைவர், தேசிய செயலாளர், தேசிய துணைத் தலைவர் உள்ளிட்ட பல்வேறு பொறுப்புகளை வகித்துள்ள இல கணேசன், பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினராகவும் செயல்பட்டுள்ளார்.

இந்நிலையில் நாகாலாந்து ஆளுநர் இல. கணேசனின் சகோதரர் இல.கோபாலன் (83) வயது மூப்பு மற்றும் உடல் நலக்குறைவால் காலமானார்.

இல.கோபாலனின் உடல் சென்னை தியாகராயர் நகரில் உள்ள இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டுள்ளது.

# ராமேசுவரம் மீனவர்கள் இந்திய கடல் எல்லையை தாண்டி செல்ல வேண்டாம் மீன்வளத்துறை எச்சரிக்கை

மண்டபம், ஜன.10

தென்தமிழக மீனவர்கள் ஒவ்வொரு முறையும் கடலுக்கு செல்லும்போதும் எல்லைதாண்டி வந்ததாக கூறி இலங்கை கடற்படை வீரர்கள் அவர்களை தாக்கி சிறைபிடிப்பதும், மீன்பிடி உபகரணங்களை சேதப்படுத்தி விரட்டியடிப்பதும் தொடர்ந்து நடந்து வருகிறது.



சில நேரங்களில் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை துப்பாக்கி சூடும் நடத்தி வருகிறது. இதனால் தமிழக மீனவர்கள் தற்போது வரை உயிரை பணயம்வைத்து கடலுக்கு சென்று வருகின்றனர்.

இந்த நிலையில் இந்திய கடல் எல்லையையொட்டி உள்ள இலங்கை கடற்பரப்பில் வடக்கு பிராந்திய இலங்கை கடற்படையினர் இன்று (8ந்தேதி) பருத்தித்துறை கடல் பகுதியில், கடற்படை தளமான பி421 களத்தில் இருந்து துப்பாக்கி சுடும் பயிற்சி மேற்கொள்ள இருக்கிறார்கள். இதில் நூற்றுக்கணக்கான இலங்கை வீரர்கள் பங்கேற்க உள்ளனர். இந்த பயிற்சி இன்று மாலை வரை நீடிக்கும் என தெரிகிறது.

இதற்கிடையில் தமிழக மீனவர்களின் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இன்று காலை 9 மணி முதல் மாலை 4 மணி வரை இந்திய கடல் எல்லையை ஒட்டியுள்ள இலங்கை பகுதிக்கு சென்று தமிழக மீனவர்கள் மீன்பிடிக்க வேண்டாம் என அறிவிக்கப்பட்டு உள்ளது.

இலங்கை கடற்படையினர் அவரது எல்லைப் பகுதியில் துப்பாக்கி சுடும் பயிற்சி மேற்கொள்வதை கருத்தில் கொண்டு ராமேசுவரம் மீனவர்கள் யாரும் இந்திய கடல் எல்லையை தாண்டி மீன்பிடிக்க செல்ல வேண்டாம் எனவும், மேலும் பாதுகாப்பாக நமது எல்லைக்குள் மீன்பிடிக்குமாறு ராமேசுவரம் மீன்வளத்துறை அதிகாரிகள் அறிவித்துள்ளனர்.

# எடப்பாடி பழனிசாமி உறவினர் அலுவலகத்தில் 2வது நாளாக வருமான வரி அதிகாரிகள் சோதனை

ஈரோடு, ஜன.10

ஈரோடு பூந்துறை ரோடு செட்டிபாளையம்ஸ்டேட் வங்கி நகர் பகுதியில் என்.ஆர். மற்றும் ஆர்.சி.சி.எல். கட்டுமான நிறுவனங்களின் அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. இந்த நிறுவனம் என்.ராமலிங்கம் என்பவருக்கு சொந்தமானது. தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா ஆகிய மாநிலங்களில் அரசு கட்டுமான பணிகளுக்கு ஒப்பந்தம் செய்து கொண்டு குடிநீர் கட்டுமான பணிகள், சாலை பணிகள், உள்கட்டமைப்பு வசதிகள், அரசு கட்டிடங்கள் என அனைத்து வகை பணிகளையும் செய்து வருகிறது.

இந்தநிலையில் நேற்று கோவை வருமான வரித்துறை அலுவலகத்தை சேர்ந்த அதிகாரிகள் 2 கார்களில் ஈரோடு பூந்துறை ரோட்டில் உள்ள என்.ஆர். கட்டுமான நிறுவன அலுவலகத்துக்கு வந்தனர். கார்களை விட்டு இறங்கிய அதிகாரிகள் நேராக அலுவலகத்துக்குள் சென்றனர். அங்கு பணியில் இருந்தவர்கள் வெளியில் எந்த தொடர்பும் ஏற்படுத்த முடியாத வகையில் தடுப்பு நடவடிக்கைகள் செய்தனர். பின்னர் அங்குள்ள ஆவணங்கள், கணினி பதிவுகளை சோதனை செய்தனர்.

இதுபோல் இந்த நிறுவனத்துக்கு சொந்தமாக சேலம், திருச்சி உள்பட தமிழ்நாட்டின் பல்வேறு இடங்களில் செயல்பட்டு வரும் 26 அலுவலகங்களில் ஒரே நேரத்தில் வருமானவரித்துறை அதிகாரிகள் சோதனை நடத்தியதாக தெரிகிறது. வருமான வரி ஏய்ப்பு காரணமாக இந்த சோதனை நடத்தப்பட்டு வருவதாக கூறப்பட்டது.

இதனை தொடர்ந்து, இன்றும் 2வது நாளாக வருமான வரித்துறை அதிகாரிகள் சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

என்.ஆர். கட்டுமான நிறுவனம் மற்றும் ஆர்.சி.சி.எல். நிறுவனத்தின் உரிமையாளர் என்.ராமலிங்கம் தமிழக முன்னாள் முதலமைச்சரும், அ.தி.மு.க. பொதுச்செயலாளருமான எடப்பாடி கே.பழனிசாமியின் நெருங்கிய உறவினர் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரோடு கிழக்கு தொகுதியில் பறக்கும் படையினர் விடிய விடிய தீவிர வாகன சோதனை

ஈரோடு, ஜன.10

ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் தேதி அறிவிக்கப்பட்டதை அடுத்து தேர்தல் நடத்தை விதிமுறைகள் அமலுக்கு வந்தன. ஈரோடு கிழக்கு தொகுதி இடைத்தேர்தல் நடைபெற உள்ள நிலையில் வாக்காளர்களுக்கு பணம் மற்றும் பரிசு பொருட்கள் வழங்குவதை தடுக்கும் வகையில் பறக்கும்படை அமைக்கப்பட்டுள்ளது.

இடைத்தேர்தலுக்காக 3 பறக்கும் படை, ஒரு வீடியோ கண்காணிப்பு குழு, ஒருவீடியோபார்வை குழு ஆகவே உடனடியாக நியமிக்கப்பட்டுள்ளது. இது தவிர 3 நிலை கண்காணிப்பு குழு, ஒரு கணக்கு தணிக்கை குழு ஆகியவை வேட்பு மனு தாக்கல் செய்யும் 10ந் தேதி முதல்



அமைக்கப்படும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

பறக்கும் படைக்குழுவில் எக்ஸிக்யூட்டிவ் மேஜிஸ்ட்ரேட் நிலை அதிகாரி ஒருவர், ஒரு சப் இன்ஸ்பெக்டர், 2 போலீசார், ஒரு வீடியோ கிராபர் உள்ளனர். தலா 8 மணி நேரம் என 24 மணி நேரமும் பறக்கும் படையினர் ஈரோடு கிழக்கு தொகுதி முழுவதும் தீவிர கண்காணிப்பு, வாகன சோதனையில் ஈடுபட்டு வருகின்றனர்.

வாகன சோதனைகள் முறையாக நடைபெறுகிறதா என தேர்தல் நடத்தும் அலுவலர் மனீஷ் நள்ளிரவில் திடீர் ஆய்வு மேற்கொண்டார். மேலும் தொகுதிக்கு உட்பட்ட மாவட்ட எல்லையான கருங்கல்பாளையம் சோதனை சாவடி, காளை மாட்டு சிலை உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்தும் மேற்கொண்டார்.

இதில், முறையாக வாகனங்கள் சோதனை செய்யப்படுகிறதா, ஆவணங்கள்சரிபார்க்கப்படுகிறதா, பரிசுப்பொருட்கள் கொண்டு செல்லப்படுகிறதா என்பதை காவலர்கள் சோதனை செய்வதை தேர்தல் நடத்தும் அலுவலர் மனீஷ் உறுதி செய்தார். விடிய விடிய இந்த வாகன சோதனை நடைபெற்றது. மேலும் வாகனங்கள் தடுத்து நிறுத்தப்பட்டு சான்றிதழ் சரி பார்க்கப்பட்டது.

# மதுரையில் போராட்டத்தில் ஈடுபட்ட 5,000க்கும் மேற்பட்டவர்கள் மீது போலீசார் வழக்குப்பதிவு

மதுரை, ஜன.10

மதுரை மாவட்டம் மேலூர் அருகே 5 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க வேதாந்தாவின் துணை நிறுவனத்திற்கு, மத்திய அரசு அனுமதி வழங்கியது.

குறிப்பாக அரிட்டாபட்டி, வெள்ளரிப்பட்டி, நாயக்கர்பட்டி, அ.வல்லாளப்பட்டி உள்பட பல கிராமங்களில் இந்த டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க இடம் தேர்வு செய்யப்பட்டதாக தெரியவருகிறது.

இந்த திட்டம் செயல்படுத்தப்பட்டால் இயற்கை சூழல் கெடுவதோடு, வனவிலங்குகள் அழியும் என்றும், விவசாயம் மற்றும் மக்களின் வாழ்வாதாரம் பாதிப்படையும்எனக்கூறி, டங்ஸ்டன் சுரங்க திட்டத்தை மத்திய அரசு ரத்து செய்ய வேண்டும் என அப்பகுதி விவசாயிகள், கிராம மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்து பல்வேறு போராட்டங்களை நடத்தி வருகின்றனர்.

இதனிடையே டங்ஸ்டன் சுரங்க அனுமதியை ரத்து செய்ய வேண்டும் என மத்திய அரசை வலியுறுத்தி தமிழக சட்டமன்றத்தில் ஒருமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



இருப்பினும் டங்ஸ்டன் திட்டத்துக்கு எதிரான போராட்டம் தொடர்ந்து நடந்து வருகிறது.

டங்ஸ்டன் திட்டத்தை முழுமையாக ரத்து செய்ய மத்திய அரசை வலியுறுத்தும் விதமாக, மேலூர் நரசிங்கம்பட்டி பெருமாள் மலைக்கோவிலில் இருந்து மதுரை தல்லாகுளம் தலைமை தபால் நிலையம் வரை நடைபயணமாக வந்து, தமுக்கம் மைதானம் அருகே ஆர்ப்பாட்டம் செய்யப்போவதாக முல்லை பெரியாறு ஒரு போகபாசனவிவசாயிகள் சங்கத்தினர் அறிவித்து இருந்தனர்.

இந்த நடைபயணத்திற்கு, டங்ஸ்டன் சுரங்க எதிர்ப்பு கூட்டமைப்பு மற்றும், மேலூர் பகுதியில் ஏராளமான கிராம மக்கள், இயற்கை ஆர்வலர்கள், அரசியல் கட்சியினர், வணிகர்கள் ஆதரவு தெரிவித்து இருந்தனர்.

இந்த பேரணிக்கு போலீசார் அனுமதி அளிக்கவில்லை. இருந்தபோதிலும் திட்டமிட்டபடி நடைபயணமாக வந்து மதுரையில் போராட்டம் நடைபெறும் என்றும், நான்கு வழிச்சாலையில் நடைபயணமாக அல்லாமல் வாகனங்களில் பேரணியாக மதுரைக்கு செல்வோம் என விவசாயிகள் அறிவித்தனர்.

அதன்படி மேலூர், அரிட்டாப்பட்டி மற்றும் அதனை சுற்றி உள்ள 50க்கும் மேற்பட்ட கிராம மக்கள், விவசாயிகள், பெண்கள், வணிகர்கள் என பல்லாயிரக்கணக்கானவர்கள், நேற்று காலை 9 மணி அளவில் நரசிங்கம்பட்டி பகுதியில் திரண்டனர். இதனை யொட்டி 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட போலீசார் அந்த பகுதியில் குவிக்கப்பட்டனர்.

போராட்டம் தொடங்கி, நரசிங்கம்பட்டியில் இருந்து ஊர்வலமாக அனைவரும் புறப்பட்டு மதுரை நான்கு வழிச்சாலைக்கு வந்தனர். வெள்ளரிப்பட்டி பகுதிக்கு அவர்கள் வந்தபோது, முன்எச்சரிக்கை நடவடிக்கையாக போலீசார் அவர்களை தடுக்க தடுப்புகள் அமைத்திருந்தனர்.

ஊர்வலம் அங்கு வந்தபோது, போலீசார், அவர்களை முன்நோக்கி செல்ல விடாமல் தடுத்தனர். ஆனால், கூட்டம் கட்டுக்கடங்காத வகையில் இருந்ததால், போலீசாரின் பேச்சை அவர்கள் கேட்க மறுத்து தடுப்புகளை தாண்டி வந்தனர்.

கிட்டத்தட்ட 18 கி.மீ. தூரத்தை 7 மணி நேர பயணமாக கடந்து, விவசாயிகள், பெண்கள் என பல்லாயிரக்கணக்கானவர்கள், மதுரை தமுக்கம் மைதானத்துக்கு வந்து போராட்டம் நடத்தினர்.

இந்த நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட 5,000க்கும் மேற்பட்டவர்கள் மீது தல்லாகுளம் போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர். அனுமதியின்றி பேரணியாக சென்றதை அடுத்து போலீசார் வழக்கு பதிவு செய்துள்ளனர்.

# ஃபெஞ்சல் புயல் பாதித்த பயிர்களுக்கு உடனே இழப்பீடு வழங்க வேண்டும் ஜி.கே.வாசன் வலியுறுத்தல்

சென்னை, ஜன.10

த.மா.கா. தலைவர் ஜி.கே.வாசன் வெளியிட்டு உள்ள அறிக்கையில் கூறி இருப்பதாவது:

தமிழக அரசு 2023, 2024 வடகிழக்கு பருவமழைக்கும், காலநிலை மாற்றத்தால் பெய்த மழைக்கும், காவிரியில் நீர் திறக்காததால் விவசாயிகளுக்கு ஏற்பட்ட இழப்பீட்டை சரி செய்யும் வகையிலும், விவசாயிகளின் நஷ்டத்தை ஈடு செய்யும் வகையிலும் நிதியை ஒதுக்கி தர வேண்டும்.

கடந்த 2024 ஃபெஞ்சல் புயல் மற்றும் வடகிழக்குப் பருவமழையால் பாதிக்கப்பட்ட பயிர்களுக்கு குறிப்பாக கடலை, உளுந்து, சோளம், வெங்



காயம் ஆகிய பயிர்களுக்கான இழப்பீட்டை வழங்க தமிழக அரசு முன் வர வேண்டும். விவசாயிகளுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக்கு உரிய நிவாரணத்தொகையை வழங்க நிதியை ஒதுக்கி, காலத்தே வழங்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு அவர் கூறி உள்ளார்.

# மேட்டூர் அணை நீர்மட்டம் 116 அடியாக குறைந்தது

சேலம், ஜன. 10

தென்மேற்கு பருவ மழை மற்றும் வடகிழக்கு பருவமழையின் காரணமாக நீர்வரத்து அதிகரித்து கடந்த ஆண்டில் மேட்டூர் அணை 3 முறை நிரம்பியது.

இந்த நிலையில் மழை நின்றதால் அணைக்கு வரும் நீர்வரத்து குறைந்து விட்டது. அதே நேரம் அணையில் இருந்து பாசனத்துக்கு தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்பட்டு வருகிறது.

இதன் காரணமாக கடந்த 31ந் தேதி 120 அடியாக இருந்த அணையின் நீர்மட்டம் இன்று காலை 116.65 அடியாக குறைந்தது. அணைக்கு வினாடிக்கு வெறும் 694 கனஅடி தண்ணீரே வந்து



கொண்டு இருந்தது. அணையில் இருந்து டெல்டா பாசனத்துக்கு வினாடிக்கு 10 ஆயிரம் கனஅடியும், கிழக்கு, மேற்கு கால்வாய் பாசனத்துக்கு வினாடிக்கு 300 கனஅடி தண்ணீரும் திறக்கப்பட்டு வருகிறது. அணையில் தற்போது 88.22 டி.எம்.சி. தண்ணீர் இருப்பு உள்ளது.

தினகனி



# தி.மு.க. எம்.பி. கதிர் ஆனந்த் விசாரணைக்கு ஆஜராக அமலாக்கத்துறை சம்மன்

சென்னை, ஜன.10

தி.மு.க. எம்.பி. கதிர் ஆனந்த்க்கு சொந்தமான கல்லூரியில் இரண்டாவது முறையாக நடைபெற்ற அமலாக்கத்துறை சோதனை நிறைவுபெற்றது. சோதனையைத் தொடர்ந்து பென் டிரைவ், ஹார்டு டிஸ்க், ஆவணங்களின் நகல் உள்ளிட்டவைகளை அமலாக்கத்துறையினர் எடுத்துச் சென்றுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.




மேலும், வருகிற 22 ஆம் தேதி விசாரணைக்கு ஆஜராக எம்.பி. கதிர் ஆனந்த்க்கு அமலாக்கத்துறை சம்மன் வழங்கியுள்ளது. எம்.பி. கதிர் ஆனந்த்க்கு சொந்தமான கல்லூரியில் இரண்டாவது முறையாக நடைபெற்ற அமலாக்கத்துறை சோதனை சுமார் 17 மணி நேரம் நடைபெற்றது.

வேலூரை அடுத்த காட்பாடியில் உள்ள கல்லூரியில் சோதனை நடைபெற்ற நிலையில், நள்ளிரவு 2.10 மணிக்கு அமலாக்கத்துறை அதிகாரிகள் சோதனை முடிந்து புறப்பட்டு சென்றனர்.

# ராணிப்பேட்டை அருகே கோர விபத்து 4 பேர் பலி

ராணிப்பேட்டை, ஜன.10

ராணிப்பேட்டை சிப்காட் அருகே மேல்மருவத்தூர் பக்தர்கள் சென்ற பேருந்து மீது, சென்னை நோக்கி காய்கறிகளை ஏற்றி வந்த லாரி மோதி கோர விபத்து ஏற்பட்டது.

இந்த விபத்தில் லாரி ஓட்டுநர் உள்பட 4 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

மேலும் 30க்கும் மேற்பட்டவர்கள் பலத்த காயங்களுடன் மீட்கப்பட்டு வாலாஜாபேட்டை மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விபத்து தொடர்பாக போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# முறைகேட்டில் ஈடுபட்ட சிறை அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்: ஐகோர்ட்டு உத்தரவு

சென்னை, ஜன.10

சென்னை ஐகோர்ட்டில், புதுச்சேரியை சேர்ந்த கோகிலா என்பவர் தாக்கல் செய்த வழக்கில், ''என் கணவர் தண்டனை கைதியாக புழல் சிறையில் உள்ளார். சிறையில் அவர் வேலை செய்வதற்கு வழங்க வேண்டிய ஊதியத்தை 4 மாதங்களாக வழங்கவில்லை'' என்று கூறியிருந்தார்.

அதேபோல தமிழ்நாட்டில் உள்ள சிறைகளில் கைதிகள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்ததில் ரூ.14 கோடி வரை முறைகேடு நடந்துள்ளதாக நாளிதழில் வெளியான செய்தியை ஐகோர்ட்டில் தாக்கல் செய்து மனுதாரர் தரப்பு வக்கீல் புகழேந்தி வாதம் செய்தார். இதை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள், சிறை முறைகேடு குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது? என்பது குறித்து அரசு தரப்பில் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிட்டனர்.

இந்த வழக்கு நீதிபதிகள் எஸ்.எம். சுப்பிரமணியம், எம்.ஜோதிராமன் ஆகியோர் முன்பு நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தது. அப்போது, இந்த விவகாரம் தொடர்பாக அரசு மற்றும் லஞ்ச ஒழிப்புத்துறையின் அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது. பின்னர் அரசு தரப்பில் ஆஜரான வக்கீல், ''சிறை கைதிகள் தயாரித்த பொருட்களை விற்பனை செய்ததில் முறைகேடு செய்ததாக 3 அதிகாரிகள் பணியிட மாற்றம் செய்யப்பட்டுள்ளனர். குற்றச்சாட்டுக்கு ஆளான அதிகாரிகள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும். தற்போது நியாயமான விசாரணை நடந்து வருகிறது'' என்று கூறினார்.



அதற்கு நீதிபதிகள், ''தவறு செய்தவர்களை திருத்துவதற்காகத்தான் சிறைக்கு அனுப்பிவைக்கிறோம். ஆனால் அவர்களை திருத்தி நல்வழிக்கு கொண்டு வரவேண்டிய சிறைத்துறை அதிகாரிகளே குற்ற செயலில் ஈடுபட்டால் என்ன செய்வது? இந்த விவகாரத்தில் தவறு செய்த சிறை உயர் அதிகாரிகள் உள்பட அனைவர் மீதும் குற்றச்சாட்டுக்கு முகாந்திரம் இருந்தால் பாரபட்சமின்றி கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதிகாரிகள் மீது துறை ரீதியாக நடவடிக்கை எடுத்து, உடனடியாக இடைநீக்கம் உள்ளிட்ட ஒழுங்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கூறினர்.

பின்னர், ''இந்த முறைகேடு குறித்து லஞ்ச ஒழிப்பு போலீசார் விரைவாகவும், தீவிரமாகவும் விசாரணை நடத்த வேண்டும். இந்த விசாரணை குறித்து வருகிற ஏப்ரல் 4ந் தேதி விரிவான அறிக்கையை போலீசார் தாக்கல் செய்யவேண்டும்'' என்று நீதிபதிகள் உத்தரவிட்டனர்.

# டீசல் என்ஜின் மூலம் மலை ரெயில் சோதனை ஓட்டம்

ஊட்டி, ஜன.10

நீலகிரி மாவட்டத்தில் பாரம்பரியம் வாய்ந்த மலை ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. இதில் உள்நாடு மட்டுமின்றி வெளிநாடுகளில் இருந்தும் சுற்றுலா பயணிகள் அதிக அளவில் பயணம் செய்து வருகின்றனர். குறிப்பாக 2வது சீசனின் போது வடமாநில சுற்றுலா பயணிகள் மலை ரெயிலில் ஆர்வமுடன் சென்றனர்.

மலை ரெயில் பயணம் தேயிலை தோட்டங்கள், பல்வேறு குகைகள் என சிறந்த அனுபவத்தை தருகிறது. இதனால் மலை ரெயில், பாரம்பரிய யுனஸ்கோ அந்தஸ்து பெற்று உள்ளது. சாய்வு அதிகம் என்பதால் இந்தியாவிலேயே மிக குறைந்த வேகத்தில் இந்த ரெயில் இயக்கப்படுகிறது. முன்னதாக மேட்டுப்பாளையத்தில் இருந்து குன்னூர் வரை பர்னஸ் ஆயில் என்ஜின் மூலம் மலை ரெயில் இயக்கப்பட்டு வந்தது. இதற்காக 4 பர்னஸ் ஆயில் என்ஜின்கள் இருந்தன.

குன்னூர் ஊட்டி இடையே டீசல் என்ஜின் மூலம் மலை ரெயில் இயக்கப்பட்டு வருகிறது. பர்னஸ் ஆயில் மூலம் மலை ரெயிலை இயக்குவதால் அதிக அளவில் மாசு ஏற்படுவதாக கூறி, அதனை மாற்ற மத்திய மாசு கட்டுப்பாட்டு வாரியம் உத்தரவிட்டு இருந்தது. இதையடுத்து பர்னஸ் ஆயில் என்ஜினுக்கு பதிலாக டீசல் என்ஜினாக மாற்றியமைக்கும் முயற்சியில் ரெயில்வே அதிகாரிகள் ஈடுபட்டனர். இதன்படி பர்னஸ் ஆயில் என்ஜின், டீசல் என்ஜினாக மாற்றப்பட்டு மேட்டுப்பாளையம்குன்னூர் இடையே இயக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் மேட்டுப்பாளையம் குன்னூர் இடையே இயக்கப்பட்ட கடைசி பர்னஸ் ஆயில் என்ஜினான 37397 என்ற எண் கொண்ட எக்ஸ் கிளாஸ் என்ஜின் திருச்சி பொன்மலை பணிமனையில் டீசல் என்ஜினாக மாற்றி வடிவமைக்கப்பட்டு புதிதாக பொலிவுபடுத்தப்பட்டது.

இதையடுத்து அந்த டீசல் என்ஜின் மலை ரெயிலில் 4 பெட்டிகளுடன் இணைக்கப்பட்டு இரும்பு பாரங்களை ஏற்றி குன்னூர் மேட்டுப்பாளையம் இடையே சோதனை ஓட்டம் நடத்தப்பட்டது. இந்த சோதனை ஓட்டம் வெற்றி பெற்றது. எனவே, பொங்கல் பண்டிகைக்கு முன்பு சுற்றுலா பயணிகளுக்காக இயக்க கொண்டு வர ரெயில்வே அதிகாரிகள் முடிவு செய்து உள்ளனர்.

# பளு தூக்கும் போட்டியில் தங்கம் வென்ற மூதாட்டி

சேலம், ஜன.10

தேசிய அளவிலான பளு தூக்கும் போட்டியில் 50 கிலோ எடைப்பிரிவில் கோவையை சேர்ந்த 82 வயது கிட்டம்மாள் என்ற மூதாட்டி, தங்கப் பதக்கம் வென்று சாதனை படைத்துள்ளார். தனது பேரன்கள் உடற்பயிற்சி செய்வதை கண்டு கிட்டம்மாள், வார இறுதி நாட்களில் உடற்பயிற்சி கூடத்திற்கு சென்றுள்ளார்.




இதன் விளைவாக டெல்லியில் 'நேச்சுரல் ஸ்ட்ராங் பவர்லிப்டிங் பெடரேசன்' (*Natural strong powerlifting federation*) சார்பில் நடந்த பளு தூக்கும் போட்டியில் பங்கேற்று முதலிடத்தை பிடித்து அசத்தியுள்ளார். பளு தூக்கும் போட்டியில் தங்கம் வென்ற மூதாட்டிக்கு வாழ்த்துகள் குவிந்து வருகின்றன.

# தமிழக மீனவர்கள் 10 பேர் இலங்கை கடற்படையால் கைது



நாகப்பட்டினம், ஜன.10

எல்லை தாண்டி மீன்பிடித்ததாக தமிழக மீனவர்கள் 10 பேரை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது. நாகையில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 10 மீனவர்களை இலங்கை கடற்படை கைது செய்துள்ளது. அவர்களிடமிருந்து ஒரு விசைப்படகு பறிமுதல் செய்யப்பட்டுள்ளது. காரைநகரில் கைது செய்யப்பட்ட மீனவர்களை,

இலங்கை கடற்படை காங்கேசன்துறை முகாமிற்கு அழைத்துச் சென்றுள்ளனர்.



# புஷ்பா 2 படத்தின் மேக்கிங் வீடியோ வெளியீடு

கடந்த 2021ம் ஆண்டு இயக்குனர் சுகுமார் இயக்கதில் அல்லு அர்ஜுன் மற்றும் ராஷ்மிகா மந்தனா நடிப்பில் வெளியான படம் 'புஷ்பா தி ரைஸ்'. இந்த படத்தில் முக்கிய கதாபாத்திரத்தில் பகத் பாசில் நடித்திருந்தார். இப்படம் வசூல் ரீதியாகவும், விமர்சனம் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றது. இப்படத்தின் வெற்றியைத் தொடர்ந்து, கடந்த 5ந் தேதி இரண்டாம் பாகமாக 'புஷ்பா 2 தி ரூல்' படம் வெளியானது.

மைத்ரி மூவி மேக்கர்ஸ் தயாரித்துள்ள இப்படத்திற்கு தேவி ஸ்ரீ பிரசாத் இசையமைத்துள்ளார். மேலும் சாம் சி எஸ் இப்படத்திற்கு பின்னணி இசை அமைத்திருந்தார். தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளில் பான் இந்தியா படமாக வெளியானது. இப்படத்தில் 'டான்சிங் குயின்' நடிகை ஸ்ரீலீலா 'கிஸ்சிக்' என்ற பாடலுக்கு நடனமாடியுள்ளார்.

இப்படம் வசூல் ரீதியாகவும், விமர்சனம் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. உலக அளவில் ரூ.1850 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது. இப்படம் விரைவில் ரூ.2,000 கோடி வசூலை எட்டிவிடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், இப்படத்தின் மேக்கிங் வீடியோவை படக்குழு வெளியிட்டுள்ளது.

# இந்த மாத இறுதியில் வெளியாகும் 'வீர தீர சூரன் 2'?



'சேதுபதி, சித்தா' படங்களை இயக்கிய பிரபல இயக்குனர் அருண்குமார் இயக்கத்தில் விக்ரம் தனது 62 வது படமான 'வீர தீர சூரன் 2' படத்தில் நடித்துள்ளார். இப்படத்தில் எஸ்.ஜே.சூர்யா முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். மேலும், சுராஜ் வெஞ்சராமுடு, துஷரா விஜயன், சித்திக் ஆகியோர் நடித்துள்ளனர். இந்த படத்தை எச்.ஆர்.பிக்சர்ஸ் சார்பில் ரியாஷிபு தயாரித்துள்ளார். இப்படத்திற்கு ஜி.வி.பிரகாஷ் இசையமைத்துள்ளார்.

இப்படம் இரண்டு பாகங்களாக உருவாக உள்ளதை படக்குழு உறுதி செய்துள்ளது. தற்போது இப்படத்தின் இரண்டாவது பாகத்தின் படப்பிடிப்பு பணிகள் நிறைவு பெற்றுள்ளது. முதலில் இப்படத்தின் இரண்டாம் பாகம் வெளியாக உள்ளது. இப்படத்தின் வெளியீட்டிற்குப் பிறகு, முதல் பாகம் உருவாகும் என படக்குழு தெரிவித்துள்ளது.

இப்படத்தில் நடிகர் விக்ரம் கிராமிய தோற்றத்தில் 'காளி' என்ற கேங்ஸ்டர் கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். படத்தின் டைட்டில் டீசர் மற்றும் போஸ்டர்கள் சில மாதங்களுக்கு முன் வெளியாகி வைரலாகின. படத்தில் எஸ்.ஜே சூர்யா காவல் அதிகாரியாக நடித்துள்ளார். படத்தின் இரண்டாம் கட்ட படப்பிடிப்பு தென்காசி, மதுரை போன்ற பகுதிகள் நடைபெற்றது. தமிழ்நாட்டில் இப்படத்தின் திரையரங்க விநியோக உரிமையை 5 ஸ்டார் நிறுவனம் கைப்பற்றியுள்ளது.

சமீபத்தில் இப்படத்தின் டீசர் வெளியாகி படத்தின் மீதான எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியது. படத்தின் ரிலிஸை எதிர்பார்த்து ரசிகர்கள் பலரும் காத்துக் கொண்டிருக்கின்றனர். இந்தநிலையில் இப்படம் வருகிற 30ம் தேதி திரைக்கு வரும் எனவும் இது குறித்து அதிகாரபூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாகும் எனவும் தகவல் வெளியாகி உள்ளது.

# ஐடென்டிட்டி படம் எப்படி இருக்கிறது? விமர்சனம்

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகை திரிஷாவும், மலையாள சினிமாவின் முன்னணி நடிகர் டோவினோ தாமஸும் இணைந்து நடித்துள்ள படம் 'ஐடென்டிட்டி'. இப்படம் கடந்த 2ந் தேதி திரையரங்குகளில் வெளியானது. இந்த படத்தில் வினய் ராய் முக்கிய கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார். இந்த படத்தினை அகில் பால், அனஸ்கான் இயக்கியுள்ளனர். இப்படத்தினை ராகம் மூவிஸ் நிறுவனம் தயாரித்துள்ளது. ஜேக்ஸ் பிஜாய் இந்த படத்திற்கு இசையமைத்திருக்கிறார்.

இந்த நிலையில், திரிஷா நடித்துள்ள 'ஐடென்டிட்டி' படம் எப்படி இருக்கிறது என்பதை காண்போம்.

பெண்கள் ஆடை மாற்றும் அறையில் செல்போனை மறைத்து வைத்து ஆபாச படம் எடுத்து மிரட்டி பணம் பறிப்பவனை மர்ம நபர் எரித்து கொலை செய்கிறார். கொலையை திரிஷா நேரில் பார்க்கிறார். போலீஸ் அதிகாரி வினய் குற்றவாளியின் அடையாளங்களை வைத்து உருவத்தை அப்படியே வரையும் டோவினோ தாமஸ் மூலம் திரிஷா சொல்லும் கொலையாளி உருவத்தை வரைகிறார்.

அந்த உருவம் அனைவரையும் அதிர்ச்சியாக்குகிறது. கொலையாளி யார்? போலீசாரால் அவனை கண்டுபிடிக்க முடிந்ததா என்பது மீதி கதை.

டோவினோ தாமஸ் ஸ்டைலிசாக வந்து படம் முழுக்க அசத்தல் நடிப்பை வெளிப்படுத்தி இருக்கிறார். கிளைமாக்ஸ் சண்டை ஹாலிவுட் தரம். திரிஷா கொலைகளை பார்த்து மிரட்சி. கொலையாளியை அடையாளம் காட்டுவதில் தடுமாற்றம் என உணர்வுகளை முகத்தில் நேர்த்தியாக கடத்தி இருப்பது சிறப்பு.

போலீஸ் அதிகாரியாக வரும் வினய் கதாபாத்திரம் திருப்பங்கள் ஏற்படுத்தும் முக்கியத்துவம் வாய்ந்தது. அதை அவரும் புரிந்து தேவையான நடிப்பை வழங்கி மிரள வைக்கிறார். அஜு வர்க்கீஸ், மந்திரா பெடி, அர்ச்சனா கவி, அர்ஜுன் ராதாகிருஷ்ணன், ஷம்மி திலகன் உள்ளிட்ட அனைவரும் அவரவர் கதாபாத்திரங்களில் நிறைவு செய்துள்ளனர். சில காட்சிகளை எளிமையாக சொல்லி இருக்கலாம்.

அகில் ஜார்ஜ் கேமரா, சண்டை சேசிங் காட்சிகளை பிரமாண்டமாக படம் பிடித்துள்ளது. ஜேக்ஸ் பிஜாயின் பின்னணி இசை பலம்.

ஒரு கொலையின் பின்னணி கதையை சீட் நுனிக்கு இழுக்கும் திருப்பங்களுடன் விறுவிறுப்பாக நகத்தி உள்ளனர் இயக்குனர்கள் அகில் பால், அனஸ் கான்.

# மலேசிய ஓபன் பேட்மிண்டன்: மாளவிகா பன்சோத் 2வது சுற்றுக்கு முன்னேற்றம்




மலேசியாவின் கோலாலம்பூர் நகரில் மலேசிய ஓபன் 2025 பேட்மிண்டன் போட்டி தொடர் நடந்து வருகிறது. இந்த தொடரில் பல முன்னணி வீரர் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொண்டுள்ளனர். இந்நிலையில், இந்த தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவில் இன்று நடைபெற்ற முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் மாளவிகா பன்சோத், மலேசியாவின் கோ ஜின் வெய் உடன் மோதினார்.

இந்த போட்டியில் தொடக்கம் முதலே ஆதிக்கம் செலுத்திய மாளவிகா பன்சோத் 21-15, 21-16 என்ற செட் கணக்கில் கோ ஜின் வெய்யை வீழ்த்தி 2வது சுற்றுக்கு முன்னேறினார். இதே பிரிவில் இன்று நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் இந்தியாவின் ஆகர்ஷி காஷ்யப், டென்மார்க்கின் ஜூலி டவால் ஜாகோப்சன் உடன் மோதினார்.

இதில் 14-21, 12-21 என்ற செட் கணக்கில் டென்மார்க்கின் ஜூலி டவால் ஜாகோப்சனிடம் தோல்வி கண்ட ஆகர்ஷி காஷ்யப் தொடரில் இருந்து வெளியேறினார்.

# சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வை அறிவித்த நியூசிலாந்து முன்னணி வீரர்



நியூசிலாந்து அணியின் அதிரடி தொடக்க ஆட்டக்காரர் மார்டின் கப்தில் (வயது 38). இவர் நியூசிலாந்து அணிக்காக கடந்த 2009ம் ஆண்டு அறிமுகம் ஆனார். இவர் நியூசிலாந்து அணிக்காக இதுவரை 47 டெஸ்ட் போட்டிகளில் ஆடி 2586 ரன்னும், 198 ஒருநாள் போட்டிகளில் ஆடி 7346 ரன்னும், 122 டி20 போட்டிகளில் ஆடி 3531 ரன்னும் எடுத்துள்ளார்.

இவர் நியூசிலாந்து அணிக்காக கடைசியாக 2022ம் ஆண்டு அக்டோபர் மாதம் விளையாடினார். அதன்பின்னர் நியூசிலாந்து அணியில் இடம் பிடிக்காத கப்தில் இன்று சர்வதேச கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்துள்ளார். இவர் கடந்த 2015ம் ஆண்டு நடைபெற்ற 50 ஓவர் உலகக்கோப்பை தொடர்ல் 237★ ரன்கள் அடித்து சாதனை படைத்தார்.

மேலும், ஒருநாள் போட்டிகளில் இரட்டை சதம் அடித்த முதல் நியூசிலாந்து வீரர் என்ற சாதனையையும் படைத்துள்ளார். இவர் கட்ந்த 2019ம் ஆண்டு நடைபெற்ற 50 ஓவர் உலககோப்பை தொடரில் அரையிறுதி ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் மகேந்திர சிங் தோனியை ரன் அவுட் ஆக்கியதன் மூலம் மிகவும் பிரபலமடைந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

# பும்ராவுக்கு பதிலாக இவர்களில் ஒருவரை டெஸ்ட் கேப்டனாக நியமிக்கலாம் முகமது கைப்

இந்திய கிரிக்கெட் அணி சமீபத்தில் ஆஸ்திரேலியாவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் ஆடியது. இந்த தொடரில் முதல் போட்டியில் வெற்றி பெற்ற இந்தியா, அதன்பின்னர் பெரும் சரிவை சந்தித்தது. இதன் காரணமாக 5 போட்டிகள் கொண்ட தொடரை 13 என்ற கணக்கில் இந்தியா இழந்தது. இந்தியா தொடரை இழக்க விராட், ரோகித், சுப்மன் கில் போன்ற வீரர்கள் சிறப்பான பேட்டிங்கை வெளிப்படுத்தாததே முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது.

இந்த தொடரின் கடைசி ஆட்டத்தில் இருந்து கேப்டன் ரோகித் சர்மா விலகினார். இதையடுத்து இந்திய கேப்டனாக ஜஸ்ப்ரீத் பும்ரா செயல்பட்டார். இந்திய அணி அடுத்ததாக வரும் ஜூன் மாதம் தான் டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆட உள்ளது. எனவே, டெஸ்ட் அணியின் கேப்டனாக ரோகித் செயல்படுவாரா என்பதில் சந்தேகம் நிலவுகிறது. அதேசமயம், இனிவரும் டெஸ்ட் போட்டிகளில் இந்தியாவின் கேப்டனாக பும்ராவே செயல்படுவார் என தகவல் வெளியாகி உள்ளது.

இந்நிலையில், டெஸ்ட் கிரிக்கெட்டில் பும்ராவுக்கு பதிலாக அதிரடியாக விளையாடி வரும் ரிஷப் பண்ட் அல்லது கே.எல். ராகுல் அடுத்த கேப்டனாக தகுதியானவர்கள் என இந்திய முன்னாள் வீரர் முகமது கைப் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது, ஜஸ்ப்ரீத் பும்ரா வருங்காலங்களில் கேப்டன்ஷிப் பொறுப்பை எடுத்துக் கொள்ள மாட்டார். ரோகித் சர்மாவுக்கு பின் அவர் கேப்டனாக வருவது சரியான ஐடியா கிடையாது. ஏனெனில் தற்சமயத்தில் அவர் மட்டும் தான் ஒட்டுமொத்த பாரத்தையும் சுமந்து கொண்டு மற்ற பவுலர்களிடம் குறைவான ஆதரவை பெற்றுக்கொண்டு முழு மூச்சுடன் அணிக்காக பவுலிங் செய்கிறார்.

அதுவே தற்சமயத்தில் அவர் காயத்தை சந்திப்பதற்கும் ஒரு காரணமாகும். அவர் இவ்வாறு காயத்தை சந்திப்பது இது முதல் முறையும் அல்ல. எனவே பும்ரா கேப்டனாக வேண்டும் என்று நான் நினைக்கவில்லை. டெஸ்ட் கிரிக்கெட்டில் ரிஷப் பண்ட் அல்லது கே.எல். ராகுல் போன்ற பேட்ஸ்மேன் கேப்டனாக விரும்புவதை நான் விரும்புகிறேன். அவர்கள் ஐ.பி.எல் தொடரில் கேப்டன்ஷிப் செய்துள்ளார்கள். எனவே அவர்களில் ஒருவர் கேப்டனாக செயல்படலாம். இவ்வாறு அவர் கூறினார்.

NAMADHU DHINA KANI
Canara Bank
Account: 120028528266
IFSC code: CNRB0001041

Printed by KANIRAJA V. published by KANIRAJA V. on behalf of NAMADHU DHINA KANI TAMIL DAILY and printed at SEAMAN GRAPHICS No. 7/253, KVN puram 2 2nd street, KilpaukGarden, Chennai 600010. and published at No.28, Thalikattipalayam, Kaithamalai Road, Uttukuli, Tiruppur - 638751. Editor: KANI RAJA V.